

இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 25.12.2025

# அனைவர்க்குமான அரசு!

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், "மதச்சார்பின்மை என்னும் தி.மு.க. அரசின் இரட்டை வேடம் கலையத் தொடங்கிவிட்டது" என்று சொல்லி இருக்கிறார். "கந்தர் மலையில் தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுத்துவிட்டது, சிக்கந்தர் தர்க்காவில் சந்தனக் கூடு திருவிழா நடத்த அனுமதித்துள்ளது" என்ற பொய்யைச் சொல்லி இருக்கிறார் நயினார் நாகேந்திரன்.

திருப்பரங்குன்றத்தில் காலம் காலமாக தீபம் ஏற்றும் இடத்தில் தீபம் ஏற்றப் பட்டு விட்டது. பா.ஜ.க. சொல்லும் இடத்தில் எல்லாம் தீபம் ஏற்ற முடியாது.

**கார்த்திகை தீபம் அன்று திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கோவிலில் காலம் காலமாக தீபம் ஏற்றும் இடத்தில் தீபம் ஏற்றப்பட்டது. 3.12.2025 புதன்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வழக்கப்படி திருக்கோவிலுக்குள் பால தீபம் ஏற்றப்பட்டது. அதன்பிறகு அதே நேரத்தில் வழக்கமாக ஏற்றக் கூடிய உச்சிப்பிள்ளையார் கோவிலில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்றப்பட்டு பின்பு சுவாமி புறப்பாடு ஆகி, பதினாறு கால் மண்டபம் எதிரே உள்ள இடத்தில் சொக்கப்பான் ஏற்றி சுவாமிக்கு சாத்தப்பட்டது. இவை முறையாக நடந்தது. இது பக்தர்கள் அனைவருக்கும் தெரியும்.**

ஆனால், வழக்கமான இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று ஒரு கும்பல், உள்நோக்கத்தோடு பல காலமாகச் செயல் பட்டு வந்தார்கள்.

மலைப்பகுதியில் இருக்கும் தர்காவுக்கு அருகில் இருக்கும் தூணில் தீபம் ஏற்றுவதன் மூலமாக இரு மதப்பிரிவினர் இடையே மோதலை உண்டாக்கி, அதன் மூலமாக குழப்பத்தை ஏற்படுத்தப் பார்த்தார்கள். இதனை தமிழ்நாடு அரசு அனுமதிக்கவில்லை. கலவரம் ஏற்படுத்தப் பார்த்தவர்கள் நினைப்பில் மண்ணைப் போட்டு விட்டது தமிழ்நாடு அரசு. அந்த எரிச்சலில்தான் நயினார் நாகேந்திரன் பேசி இருக்கிறார்.

அதே டிசம்பர் 3 ஆம் தேதியன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற காட்சியை நாட்டு மக்கள் அனைவரும் பார்த்தார்கள். இலட்சக்கணக்கான பக்தர்கள் நேரில் சென்று தீபக் காட்சியை பார்த்தார்கள். உண்மையாக நயினார் நாகேந்திரன் போன்றவர்கள் இதனைத்தான் பாராட்டி இருக்க வேண்டும்.

**திராவிட மாடல் ஆட்சியில் 3,177 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இது எந்த ஆட்சியிலும் நடக்காத சாதனை ஆகும். 997 திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.7 ஆயிரத்து 701 கோடி மதிப்பீட்டிலான 7,655.75 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதுவும் எந்த ஆட்சியிலும் நடக்காத சாதனை ஆகும். 2 லட்சத்து 03 ஆயிரத்து, 444 ஏக்கர் நிலங்கள் அளக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. ரூ.6 ஆயிரம் கோடி மதிப்பிலான 26 ஆயிரம் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.**

12,876 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள மாநில ஆலோசனைக்குழு அனுமதி அளித்துள்ளது. ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் 425 கோடி ரூபாய் மானியம் வழங்கப் பட்டுள்ளது. ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியில் உள்ள 5 ஆயிரம் கோவில்கள், கிராமப்புறத்தில் உள்ள 5 ஆயிரம் கோவில் திருப்பணிகளுக்கு நிதி உதவி அளித்துள்ளோம். ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட ஆயிரக் கணக்கான மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அரசு நிதியில் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

**அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தினை செயல்படுத்தி இதுவரை 29 பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டுள்ளன. இவ்வரசு பொறுப்பேற்ற பின் 12 பெண் ஓதுவார்கள் உட்பட 46 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. அன்னைத் தமிழில் வழிபாடு செய்யும் திட்டம் 295 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.**

இந்த அரசு பொறுப்பேற்றபின் ஒருகால பூஜைத் திட்டத்தில் பயன்பெற்று வந்த திருக்கோயில்களின் வைப்பு நிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாகவும், தற்போது ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டு, 18,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. ஒருகால பூஜைத் திட்டத்திலுள்ள 18,000 திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு இவ்வரசு பொறுப் பேற்றபின் முதல் முறையாக மாதந்தோறும் ரூ.1,000/ மாத ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. ஒருகால பூஜைத் திட்டத்தில் பயன்பெறும் திருக்கோயில்களின் அர்ச்சகர்களின் பிள்ளைகளின் நலன்கருதி அவர்களின் மேற்படிப்புக்காக கடந்த இரண்டாண்டுகளில் தலா ரூ.10,000/ வீதம் 900 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

**நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் 30 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட ஆண்டுகளாக நிலுவையில் இருந்த துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு 935 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். திருக்கோயில்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொகுப் பூதியத்தில் பணியாற்றி வந்த 1,342 பணியாளர்கள் பணிவரன் முறைப்படுத்தப் பட்டுள்ளனர். நயினார்கள் கண்ணுக்கு இதெல்லாம் தெரியாது. ஆனால் உண்மையான பக்தர்களுக்கு இது தெரியும். அவர்களுக்கு திராவிட மாடல் ஆட்சி பற்றியும், முதலமைச்சர் பற்றியும் புரியும்.**

எழுத்தாளர் ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களை நேற்றைய தினம் வெளியிட்டு உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியானது அனைவருக்குமான ஆட்சியாக எப்படி நடைபெற்று வருகிறது என்பதை மிகச் சிறப்பாக விளக்கினார்.

**"கடந்த வாரம் விமான நிலையத்திற்கு எதிரே உள்ள தமிழ்நாடு ஹஜ் இல்லத்துக்கு நான் அடிக்கல் நாட்டினேன். அடுத்த சில நாட்களில் மனிதநேய மகத்துவத்தைச் சொல்கிற கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றேன். மறுநாள் திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் நெல்லையப்பர் திருக்கோயில் வெள்ளித் தேர் ஜனவரி மாதம் முதல் மீண்டும் ஓடும் என்று அறிவித்தேன். இதுதான் திராவிட மாடல். இதனால் தான் நம்மை எப்படி கார்னர் செய்வது என்று தெரியாமல் எதிரிகள் புலம்புகிறார்கள்"** என்று முதலமைச்சர் சொன்னதில் அனைத்தும் அடங்கி இருக்கிறது.

**'கார்னர்' செய்பவர்கள் தான் காணாமல் போவார்கள்.**

# தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, டிச. 25 -*

இன்று மற்றும் நாளை தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இரவு /அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தென்தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று தென்தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.12.2025) முகாம் அலுவலகத்தில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

## நாங்கள் நிச்சயமாக உறுதியாக இருக்கின்றோம்!

# 'திராவிட மாடல்' ஆட்சி தொடரும், மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக தொடர்வார்!

## கோவை விமான நிலையத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

கோவை, டிச.25 -

சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்த கழக துணைப் பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு கோவை விமான நிலையத்தில், கழக மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டா முத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் வரவேற்பு அளித்தனர்.



கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களிடம் கூறியதாவது : -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பொழுது, தேர்தல் அறிக்கை குழு கோவையில் இருக்கும் நிர்வாகி களிடம் கலந்து பேசி பின்னர் தேதி முடிவு செய்யப்படும்.

தொழில் துறையினர், விவசாயிகள் என அனைத்துத் தரப்பினரிடமும் கருத்துக்கள் கேட்கப்படும். திராவிட முன்னேற்ற கழகம் தயாரிக்கும் தேர்தல் அறிக்கை, மக்களுடைய தேர்தல் அறிக்கையாக இருக்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பை சொல்வதாக இருக்க வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

இங்கிருக்கும் அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்து கருத்துகள் கேட்கப்படும்.

மக்களுடைய தேவைகள் என்ன என்பதை கேட்டு தெரிந்து கொண்டு எதையெல்லாம் செய்ய முடியுமோ, அதை வாக்குறுதியாக கொடுப்போம். அதில் எண்ணிக்கை என்று எதுவும் கணக்கு இல்லை, பெண்கள் பாதுகாப்பு குறித்து எதிர்க்கட்சி விமர்சனங்கள் குறித்த கேள்விக்கு,

அரசியல் காரணங்களுக்காக தேர்தல் நேரத்தில் பல விமர்சனங்களை சில பேர் வைப்பார்கள். அதற்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. இங்கே இருக்கக்கூடிய நபர்களுக்கு தெரியும். இதற்கு மேல் சொல்லத் தேவையில்லை.

யாருக்கு எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்பது தேர்தல் முடிந்த பிறகு மிகத் தெளிவாக தெரியும்.

நாங்கள் நிச்சயமாக உறுதியாக இருக்கிறோம் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி தொடரும், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக தொடர்வார் என செய்தியாளரிடம் கூறினார்.

## கிருஷ்ணகிரியில் நல உதவிகள் வழங்கல்!

*கிருஷ்ணகிரி, டிச. 25-*

திராவிட முன்னேற்ற கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் கிரி தலைமையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கிருஷ்ணகிரி மீனாட்சி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் கலந்து கொண்டு ஆயிரம் பெண்களுக்கு புடவை , மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் பேட், பால், கைப்பந்து, டீ சர்ட் மற்றும் விளையாட்டு உபகரணங்களையும் நலத்திட்ட உதவிகளையும், வழங்கினார்.

இந்த விழாவில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், கர்நாடகா மாநில அமைப்பாளர் ராமசாமி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அன்பரசு, மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, ஒன்றிய செயலாளர் தேங்காய். சுப்பிரமணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சங்கர், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.


